சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
செய்திமடல் - 45 | 29-03-2012



## 22-03-2012 அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு

**தலைப்பு : இணையத்தில் தமிழ் ஆய்வேடுகளும் தமிழ் நூல் விற்பனையும்**

**தொடக்கவுரையாடல் : விருபா து. குமரேசன்**

### தமிழ் நூல்களுக்கான விபரக்கொத்து

தமிழில் வெளிவந்த நூல்களுக்கான விபரக்கொத்துக்களைத் தயாரிக்கும் முயற்சி பிரித்தானியர் ஆட்சிக்காலத்திலேயே தமிழகத்தில் இடம்பெறத் தொடங்கிவிட்டது. சுதந்திரத்துக்குப் பின்னான காலப்பகுதிகளில் தமிழக மாநில அரசாலும் சில நிறுவனங்களாலும் இவ்வாறான முயற்சிகள் செய்யப்பட்டன. நாளடைவில் தமிழில் வெளிவரும் எல்லா நூல்களுக்குமான விபரக்கொத்தினைத் தயாரிக்கும் முயற்சி நடைமுறைச்சாத்தியமற்றுப் போனது. கையாள்வதற்குக் கடினமான அளவுக்குப் பெருகிவிட்ட நூல்களின் எண்ணிக்கை, பெருஞ்செலவில் தயாரிக்கப்படும் விபரக்கொத்துக்கான சந்தை மிகக்குறைந்த அளவில் காணப்படுவது போன்ற காரணிகள் இம்முயற்சிகளில் ஏற்பட்ட தேக்க நிலைக்குக் காரணமாயின.

இலங்கைத் தமிழ் நூல்களுக்கென என். செல்வராஜா அவர்கள் "நூல் தேட்டம்" என்றொரு விபரக்கொத்தினைத் தொடர்ச்சியாக வெளியிட்டு வருகிறார். இலங்கைத்தமிழ் நூல்கள் என மட்டுப்படுத்தப்பட்டிருப்பதால் இம்முயற்சி ஓரளவுக்குச் சாத்தியமானதாக அமைகிறது.

தகவற்தொழிநுட்பம் அறிமுகமாகிப் பிரபலமானபிறகு புத்தகங்களுக்கான விபரக்கொத்துக்களை மின்வடிவில் உருவாக்கிப் பராமரிப்பது இலகுவானதாகவும் வினைத்திறன் மிக்கதாகவும் ஆகியது. இந்தச் சாத்தியத்தைப் பயன்படுத்தும் நோக்குடனேயே விருபா தளம் அமைக்கப்பட்டது. ஆனால் விருபா தளத்தில் புத்தகங்களின் விபரங்களைச் சேர்ப்பதற்குப் பணம் அறவிடப்படுகிறது. எனவே இவ்விபரக்கொத்தில் பணம் கொடுத்து நூலைச்சேர்ப்பவர்களது நூல்கள் மட்டுமே பெரும்பாலும் இடம்பெற முடியும்.

### ஆய்வேடுகளும் ஆய்விதழ்களும்

விருபா தளத்திற்காகச் செய்யப்பட்ட மென்பொருளைக்கொண்டு ஆய்வேடுகளை ஆவணப்படுத்தும் முயற்சி தொடங்கப்பட்டது. இதற்குமுன்னர் ஆய்வேடுகளும் ஆய்விதழ்களும் தமிழில் இணையத்தில் முறையாக ஆவணப்படுத்தப்படாமையின் குறையை ஓரளவுக்கேனும் தீர்க்கும் சிறு முயற்சியாகவே இது தொடங்கப்பட்டது.

இந்த முயற்சிக்கான நல்ல எடுத்துக்காட்டுகளாக தமிழ் இணைய மாநாட்டுக் கட்டுரைகள் இணையத்தில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளமையையும் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தமிழியல் ஆய்விதழின் ஆய்வுக்கட்டுரைகள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளமையையும் கூறலாம்.

இத்தளங்களுக்கான இணைய முகவரிகள் :

*ulakaththamizh.org*
*infitt.org*

இம்மென்பொருளில் இணைய வாசகர் ஒருவர் ஆய்வுக்கட்டுரைகளை துறை அடிப்படையில், குறிச்சொற்கள் அடிப்படையில், ஆய்வாளருடைய பெயர் அடிப்படையில், உசாத்துணை நூல்களின் அடிப்படையில் தேடுவதற்கான வசதிகளும் சேர்க்கப்பட்டுள்ளன. இதைத்தவிரவும் பல்வேறு வசதிகள் இதில் உள்ளன.

ஆய்வேடுகளை ஆவணப்படுத்தும் முயற்சிக்கு பல்கலைக்கழகங்கள் பல ஆதரவு தரத் தயங்குகின்றன. பல பேராசிரியர்களுக்கு இவ்வாறு ஆய்வேடுகள் இணையத்தில் ஆவணப்படுத்தப்படுவதில் ஆர்வம் இல்லாத நிலையும் காணப்படுகிறது.

இந்த ஆவணப்படுத்தல் முயற்சியை ஆரம்பித்த பிறகு *PHD* ஆய்வுக்கட்டுரைகள் பல ஒரே தலைப்பில் செய்யப்பட்டிருப்பதைக்கூடக் கண்டறிய முடிந்தது.

மிகுதி அடுத்த பக்கம்

### அடுத்து வரும் தலைப்புக்கள்

**அரபு நாடுகளில் நடக்கும் எழுச்சிகளின் பின்னணிகள்**
A. M. M. நிசாடீன் | 29-03-2012

**தற்காலக் கவிதைகளில் படிமங்களும் குறியீடுகளும்**
சி. சிவசேகரம் | 05-04-2012



அகிரா குரோசாவா

அகிரா குரோசாவா (*Akira Kurosawa*) (ஜப்பானிய மொழி 澤明 குரோசாவா அகிரா, 明 ஷின்ஜிடாய், 23 மார்ச், 1910 6 செப்டம்பர், 1998)

உலகப் புகழ்பெற்ற ஜப்பானியக் கலைப்பட இயக்குனராவார். 1943 ஆம் ஆண்டு வெளியான சன்ஷிரோ சுகடா என்ற திரைப்படத்தின் மூலம் இயக்குனராக அறிமுகமானார். 1993 ஆம் ஆண்டு தனது இறுதிப்படைப்பான மடடாயோ திரைப்படத்தினை இயக்கிய அகிரா குரோசாவா வாழ்நாள் சாதனையாளருக்கான ஆஸ்கார் விருதினையும் பிரெஞ்சு விருதான லீஜியன் டி ஹானர் விருதினையும் பெற்றவரென்பது குறிப்பிடத்தக்கது.

### சமூக விஞ்ஞான கற்கை வட்டம்

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
571/15. காலி வீதி,
வெள்ளவத்தை
0772307807
0772260165

**Facebook group :**
facebook.com/groups/ssscircle/

வலைத்தளம் :
circle.thulaa.net

## இணையத்தில் தமிழ் ஆய்வேடுகளும் தமிழ் நூல் விற்பனையும்

முன்பக்கத் தொடர்ச்சி...

**இணையத்தில் தமிழ் நூல் விற்பனை**

இணையத்தில் தமிழ் நூல்களை விற்பனை செய்வதைத் தொடர்ச்சியாகவும் நீண்டகாலமும் நன்றாகச் செய்துவரும் அமைப்பு இராம கிருஷ்ண சங்கமாகும். இவர்களைத்தவிர தமிழ்நூல், காமதேனு , NHM, வடலி போன்றவையும் இணையத்தில் நூல் விற்பனையில் ஈடுபடுகின்றன.

இணைய நூல் விற்பனையில் உள்ள முக்கியமான சவால், நூல்களை ஓரிடத்தில் வைத்திருந்து கோரப்பட்ட நூலை உடனடியாகத் தபாலில் அனுப்புவதாகும். தபால்செலவு மிகவும் உயர்வானதாக உள்ளது. இது தவிர இணையத்தில் கடனட்டை மூலம் பணம் செலுத்துவதகு இன்னமும் பெரும்பாலனவர்களுக்குத் தயக்கமுள்ளது.

இணையத்தில் மின்னூல் விற்பனை செய்யும் முயற்சியில் இலங்கையில் செல்பேசிச் சேவை வழங்கும் நிறுவனம் ஒன்று ஈடுபட்டுள்ளது என்ற தகவல் உரையாடலின் போது தெரிவிக்கப்பட்டது. அச்சிடப்பட்ட பதிப்பினை விடக் குறைந்த விலையில் மின்னூல்களை வாங்கிக்கொள்ள முடியும். வாங்கப்படும் நூல்கள் DRM (Digital Rights Management) மூலம் பாதுகாக்கப்படும்.

## அரபு நாடுகளில் நடக்கும் எழுச்சிகளின் பின்னணிகள்

இந்த வாரம் உரையாடப்படவுள்ள தலைப்பு.

1. சமகால அரபு எழுச்சிகள்.

2. அரபு எழுச்சிகள் நடந்த நாடுகளில் இருந்த அரசியல் நிலைமைகள்.

3. சமகால அரபு எழுச்சிகளை அமெரிக்கா கையகப்படுத்திக்கொண்ட விதம்.

4. எழுச்சிகளின் போது தன்னுடைய சார்புகளுக்கு ஏற்றபடி அமெரிக்கா எடுத்துக்கொண்ட இரட்டை நிலைப்பாடு.

5. தனக்கு எதிரான நாடுகளில் தன்னால் வளர்க்கப்பட்ட அல்கைதா போன்ற போராளி இயக்கங்களையே தனது தேவைகளுக்கு அமெரிக்கா பயன்படுத்தும் தன்மை.

6 அரபு வசந்தத்துக்கு பின்னணியாய் அமைகிற அரசியல்.

### மன்னிக்கவும்...

செய்திமடல் 44 இல் இடம்பெற்ற, பிரேமினி அமீரசிங்க வினால் எழுதப்பட்ட சிங்களக்கவிதையின் தமிழாக்கம் எவரால் செய்யப்பட்டதென அச்செய்திமடலில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

டிசெ தமிழன் என்பவர் அக்கவிதை தன்னால் மொழிபெயர்க்கப்பட்டதென உரிமை கோரியுள்ளார்.

சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு. இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.

BY NC SA

## உயிர்கொள்ளும் உலை

எத்தனை முறை எத்தனித்தும்
எழுத வாய்க்காத வார்த்தைகள்
தம்வெளி இழந்த நீர்ப்பாம்புகளாக நெளிந்தோடுகின்றன
பிணக்காடாய்க் குருதி பிசுபிசுக்கும் நிலம் நோக்கி

செவிப்பறைகளை மோதுகின்ற அவலத்தின் அடர் ஒலி
உனது சைன்னியம் செய்யும் முழக்கத்தில் அமிழ்கிறது
அவயங்கள் அனைத்தும் ஒடுங்கிய பின்
என்ன பேச இயலும்?
என்ன பேச இருக்கிறது?
உனது படைகள் உயர்த்தி ஏந்தும் வெற்றிக் கொடியில்
பகிரப்படாத உனது அதிகாரம் பறை சாற்றப்படுகிறது

மண்கொள்ளும் மமதைப் போரில்
முன்வந்தவர் முதுகு விலா முறித்து
தேச முழுமையும் ஒற்றை முடிமையின்கீழ்க் கொணர்ந்ததாய்
ஆர்ப்பரிக்கும் நீ அறிகுவையா
ஆரின் அடிமை நீ என்பதை?
ஆர் உனது ஆண்டான் என்பதை?
அன்றேல்
ஏகாதிபத்திய மூலதனம் எழுப்பிய
உயிர்கொள்ளும் இரும்புலையின் உற்பத்திப் பொறிமுறைக்கே
இத்தனை பேரை நீ காவு தந்திருப்பதை?

தவ சஜிதரன்
(ஜூலை 2009)

## ஆணை மாற்றும் பெண்

சாலையில் போகும்
எந்தப் பெண்ணையும்
விழி விரித்துப் பார்த்து
கண்களாலேயே கலவி கொள்ளும்
எந்த ஆணையும்
எனக்குப் பிடிப்பதில்லை

சாலையோரத்தில்
பெண்கள் வருகையில்
தாயின் சேலைக்குப் பின்னால்
ஒளிந்து கொண்டு நிற்கும்

எந்த ஆணையும்
எனக்குப்
பிடிப்பதில்லை

அம்மாவின் முந்தானையில் முதுகை வளைத்து
இரவில்
மனைவியின் மடியில்
நெஞ்சை நிமிர்த்தும்
எந்த ஆணையும்
எனக்குப் பிடிப்பதில்லை

இந்த விதமாக
ஆண்களை மாற்றிய
எந்த ஒரு பெண்ணையும்
எனக்குப் பிடிப்பதில்லைத்தான்.

சோ. மீரா
கிழக்குப் பல்கலைக்கழகம்
(தம்பூராவும் காதலும் என்ற தொகுப்பிலிருந்து)